**<u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.</u>**

**<u>MCOP. No. 213/2025</u>**

2026–ம் வருடம் ஏப்ரல் திங்கள் 28–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.2–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: ராஜேஸ்வரன்** | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் 3 ம் தரப்பினர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். மனுதாரர் மனுவில் கோரியபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்தவர் எனக்கு உறவுக்காரர் அல்ல. எனக்கு நண்பரோ, பழக்கமானவரோ, உறவுக்காரரோ, தெரிந்தவரோ அல்ல. நான் விபத்து குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. நான் இறந்துபோன நபரின் குடும்பத்தாருக்கு விபத்து குறித்து தகவல் கொடுத்தேன். நான் விபத்தில் உண்டான நபரை மருத்துவமனையில் சேர்க்கவில்லை ஆம்புலன்சை வரவழைத்தேன். நான் என்னுடைய தொலைபேசியிலிருந்து போன் செய்தேன். நான் இறந்தவரை பிணக்கூறாய்வு செய்யும் போது மருத்துவமனையில் இருந்தேன். மருத்துமனைக்கு இறந்துபோனவரின் மனைவி அழைத்ததன் பேரில் நான் பிணக்கூறாய்வு செய்யும்போது மருத்துவமனைக்கு சென்றேன்.

இறந்தவரின் மனைவி உங்களை அழைக்கவில்லை என்றும் இறந்துபோன நபர் உங்களுக்கு நெருங்கிய உறவினர் என்பதால் தான் நீங்கள் மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் 10 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். ம.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சியாக என்னுடைய பெயர் இல்லை. விபத்து சம்மந்தமாக காவல்துறையினர் உங்களை விசாரிக்கவில்லை என்பதால் தான் உங்கள் பெயர் இறுதி அறிக்கையில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் விபத்து சமயத்தில் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் பேருந்திற்கு முன்பாக செல்லும்போது அவர் இருசக்கர வாகனத்தினை திடீரென்று பிரேக் அடித்ததால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல அவர் பாலத்தின் மீது ஏறி சென்று கொண்டிருந்தபோது பேருந்து அவர் பின்னால் சென்று இடித்து விபத்து ஏற்பட்டது. நீங்கள் விபத்து சமயத்தில் அங்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் இறந்துபோன நபர் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்தை நீங்கள் நேரில் பார்க்காமல் விபத்தில் இறந்தவர் உங்கள் உறவினர் என்பதால் விபத்தை பார்த்ததாக அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.04.28 17:40:48 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.